
SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
Welcome to
We Shine
Online Classes
SAMSUNG

# தூது

# தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

# தூது

## பொருள்

**அன்புடைமை:** தன் நாட்டு மக்கள் மீதும், தன் அரசன் மீதும் கொண்ட பற்று.

**ஆன்ற:** நிறைந்த, மிக உயர்ந்த (Superior).

**குடிப்பிறத்தல்:** நற்குடியில் (ஒழுக்கமான குடும்பப் பின்னணியில்) பிறப்பது.

**வேந்தவாம்:** அரசன் விரும்பத்தக்க (அரசனுக்கு இருக்க வேண்டிய).

**பண்புடைமை:** நற்பண்புகளைக் கொண்டிருத்தல் (கண்ணியம், நாவடக்கம், பொறுமை).

# தூது

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

SINCE 2013 WeShine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

# தூது

## பொருள்

**அன்பு:** சுற்றத்தார் மற்றும் நாட்டின் மீது கொண்ட பற்று (Loyalty).

**அறிவு:** காலம், இடம் மற்றும் சூழலைப் புரிந்து கொள்ளும் கூர்மையான மதிநுட்பம் (Intelligence).

**ஆராய்ந்த சொல்வன்மை:** எதை, எப்படி, யாரிடம் பேச வேண்டும் என்று ஆராய்ந்து பேசும் சொல்லாற்றல் (Eloquence/Oratory skills).

# தூது

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

# தூது

## பொருள்

**நூலாருள்:** நீதி நூல்களைக் கற்ற அறிஞர்களுக்குள்ளே.

**நூல்வல்லன்:** அந்த நூல்களின் நுட்பங்களை முழுமையாக அறிந்த வல்லவன்.

**வேலாருள்:** வேல் ஏந்திய வீரர்களுக்குள்ளே (பகை நாட்டு மன்னன் மற்றும் அவனது வீரர்கள்).

**வென்றி:** வெற்றி.

**வினையுரைப்பான்:** தான் வந்த காரியத்தைச் சொல்பவன் (தூதுவன்).

# தூது

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

# தூது

## பொருள்

**அறிவு:** இயற்கை நுட்பமான அறிவு (Natural Intelligence/Mati).

**உரு:** கண்ணியமான தோற்றம் (Impressive Personality/Appearance).

**ஆராய்ந்த கல்வி:** நுட்பமாக ஆராய்ந்து கற்ற அறிவு (Deep Scholarship).

**செறிவு:** இந்த மூன்றின் ஒருமித்த சேர்க்கை (Integration).

**வினைக்கு:** தூதுச் செயலை நிறைவேற்ற.

# தூது

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

# தூது

## பொருள்

**தொகச்சொல்லி:** சொல்ல வேண்டிய கருத்துக்களைத் தொகுத்து (சுருக்கமாக) சொல்லுதல்.

**தூவாத நீக்கி:** (தூவாத - பயனில்லாத) தேவையற்ற மற்றும் கசப்பான சொற்களைத் தவிர்த்தல்.

**நகச்சொல்லி:** கேட்பவர் மனம் மகிழும் வகையில் இன்முகத்துடன்

**இனிமையாகச் சொல்லுதல்.**

**நன்றி பயப்பது:** நன்மை விளையும்படி செய்தல்.

# தூது

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது.

# தூது

## பொருள்

**கற்று:** நீதி நூல்கள் மற்றும் அரசியல் நூல்களைக் கற்று.

**கண் அஞ்சான்:** எத்தகைய ஆபத்து வந்தாலும், பகை மன்னனின் பார்வைக்கு அஞ்சாதவன்.

**செலச்சொல்லி:** தான் சொல்ல வந்த கருத்தைப் பகைவர் மனதில் பதியும்படி (மனம் கொள்ளும்படி) சொல்லுதல்.

**காலத்தால் தக்கது அறிவது:** சரியான நேரத்தை அறிந்து, அந்த நேரத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான முடிவை எடுப்பது.

# தூது

கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
தெண்ணி உரைப்பான் தலை.

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

# தூது

**பொருள்**

தன் கடமை இன்னதென்று தெளிவாக அறிந்து , அதை செய்வதற்கு ஏற்றக்காலத்தை எதிர்நோக்கி தக்க இடத்தையும் ஆராய்ந்து சொல்கின்றவனே தூதன்.

# தூது

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

# தூது

## பொருள்

**தூய்மை:** கபடம் இல்லாத மனத்தூய்மை மற்றும் ஒழுக்கம் (Integrity/Purity).

**துணைமை:** (மன்னனுக்கு) துணையாக இருக்கும் சுற்றத்தாரோடு ஒத்துப்போதல் அல்லது நல்ல துணைகளை (ஆதரவை) கொண்டிருத்தல்.

**துணிவுடைமை:** உயிருக்கு ஆபத்து வந்தாலும் அஞ்சாத மனத்திடம் (Courage).

**வாய்மை:** உண்மைத்தன்மை.

வழியுரைப்பான்: முறைப்படி தூதுச் செய்தியைச் சொல்பவன்.

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

# தூது

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

# தூது

## பொருள்

**விடுமாற்றம்:** தனது அரசன் சொல்லி அனுப்பிய விடை அல்லது செய்தி (The message/reply sent by the king).
வேந்தர்க்கு உரைப்பான்: மாற்றான் நாட்டு அரசனிடம் சொல்பவன் (தூதுவன்).

**வடுமாற்றம்:** பழி தரக்கூடிய அல்லது குற்றம் உண்டாக்கக்கூடிய சொற்கள் (Harmful or abusive words).

**வாய்சோரா:** வாய் தவறியும் சொல்லிவிடாத (Without a slip of the tongue).

**வன்கணவன்:** அஞ்சாத மனவலிமை உடையவன் (Possessor of great courage/fortitude).

# தூது

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
குறுதி பயப்பதாம் தூது.

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

# தூது

## பொருள்

**இறுதி:** முடிவு (இங்கு 'மரணம்' அல்லது 'உயிர்ச் சேதம்' என்று பொருள்).

**பயப்பினும்:** உண்டானாலும் (நேர்ந்தாலும்).
எஞ்சாது: சற்றும் தயங்காமல் / பின்வாங்காமல்.

**இறைவற்கு:** தன் அரசனுக்கு (தனது நாட்டிற்கு).

**உறுதி:** நன்மை (நாட்டின் பாதுகாப்பு அல்லது நற்பெயர்).

**பயப்பதாம்:** தேடித்தருவதே.

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

# Thank You

SINCE 2013
We Shine Academy
Guiding you to get through
TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM